2003 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் இருக்கையில் இல்லை.

வினா எண் 270, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

270—

விவசாயக் கல்லூரி

•22146—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திலுள்ள அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்திலுள்ள அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே அன்னவாசல் ஒன்றியத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அண்ணா பண்ணை என்பது பேறறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்களாலே உருவாக்கப்பட்டது. ஏறத்தாழ 1017 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட மிகப்பெரிய பண்ணையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே அண்ணா பண்ணை என்பது மட்டும் 643 ஏக்கருக்கு மேலே இருக்கிறது. மீதமுள்ள பகுதிகளில் எல்லாம் வெப்ப பிராந்திய பழப் பண்ணை, உழவர் பயிற்சி நிலையங்கள் ஆகியவை அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு விவசாயக் கல்லூரியை அமைப்பதற்குத்

[2003 ஏப்ரல் 21

தேவையான அத்தனை வசதிகளும் உள்ளன. இன்னும் சொல்லப்போனால், அங்கே போதிய நஞ்சை நிலங்கள், புஞ்சை நிலங்கள் உள்ளன. பழப் பண்ணைகள், தோட்ட நிலங்கள், வானிலை ஆய்வுக் கூடங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கே போதிய கட்டட வசதிகள் இருக்கின்றன. அலுவலர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகள் இருக்கின்றன. மண் பரிசோதனை நிலையம் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. உயிர் உரங்கள் தயாரிப்பு நிலையம் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நுண்ணூட்டக் கலவை தயாரிக்கக்கூடிய பண்ணையும் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பழக் கன்றுகள், மரக் கன்றுகள் எல்லாம் நம்முடைய விவசாயத் துறை மூலம் அங்கே நடப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு பயன்படக்கூடிய வகையிலே திறமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்தப் பண்ணையை இனி வருகின்ற ஆண்டுகளிலாவது ஒரு விரிவான விவசாயக் கல்லூரியாக அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம், உறுதி தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-30*

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கிட்டத்தட்ட 10 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தின் அருகாமையிலே இருக்கிற திருச்சி, மதுரை போன்ற பகுதிகளில் கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. தற்போது கல்லூரிகளில் கிட்டத்தட்ட 531 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயின்று வெளியிலே வருகிறார்கள். மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால் 40 கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகிறது. ஆகவே புதுக்கோட்டையில் ஒரு கல்லூரி தொடங்குகிற கருத்துரு அரசிடம் இல்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ப. அரசன்.

2003 ஏப்ரல் 21]

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி தொடங்குவதற்கு நிதிச் சுமைகள் அதிகமாகத் தேவைப்படாது. நம்முடைய புதுக்கோட்டை தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. அரசுக்கு நிதிச் சுமை அதிகமாக வருவதற்கு வாய்ப்பில்லை. எங்கள் மாவட்ட மக்கள், விவசாய மக்களுடைய நலனைக் கருத்திலே கொண்டு அங்கே விவசாயக் கல்லூரி தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே ஒரு கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான அனைத்து கட்டட வசதிகளும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒரு புதிய கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உள்ள அளவுக்கு அந்தக் கட்டடங்கள் இருக்கின்றனவா என்று சொன்னால், இல்லை. ஆகவே ஒரு கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், அந்தக் கல்லூரிக்கு என்ன தேவையோ அந்த அளவுக்குக் கட்டடங்கள் தேவைப்படும். ஆகவே அரசினுடைய கருத்தில், அங்கே புதிய கல்லூரி அமைக்கிற கருத்துரு இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *271*, திரு. கே. ஆறுமுகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

271—

தர்பூசணி பதப்படுத்துதல்

***23197—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய வட்டங்களில் அதிகமாக தர்பூசணி விளைவதால், இதனைப் பதப்படுத்தவும் சாறு பிழியவும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?